
உ

சிவமயம்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும்,

சங்கரத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர்

# உயர்திரு. நாகலிங்கம் ஜெயரஞ்சிதன்

(சமாதான நீதவான்)

அவர்கள்

இறைபதம் அடைந்தமை குறித்த

# நினைவு மலர்

27.08.2008

# சமர்ப்பணம்

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து
ஆக்கத்திற்கு ஊக்கம் தந்து
இன்பமாய் வாழ்வதற்கு உலகில்
ஈகையே சிறப்பென்று கூறி
உயர்வுக்கு நல்வழிகள் காட்டி
ஊக்கமும் வேண்டும் என்றே
எண்ணுக நல்லவற்றை என்றே
ஏற்றம் அதுவே என்று
ஐயமில் வார்த்தை காட்டி
இகத்தில் வாழ்ந்து காட்டிய
எங்கள் அன்புத் தெய்வத்தின்
திருப்பாதங்களுக்கு இந்நினைவு மலரைக்
காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

குடும்பத்தினர்.



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், சங்கரத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் உயர்திரு. நாகலிங்கம் ஜெயரஞ்சிதன்

(சமாதான நீதவான்)

அவர்கள்

இறைபதம் அடைந்தமை குறித்த

# நினைவு மலர்

27.08.2008

உ

சிவமயம்



மண்ணில்

1940.04.20

விண்ணில்

2008.07.28

# அமரர்

# உயர்திரு நாகலிங்கம் ஜெயரஞ்சிதன்

(சமாதான நீதவான்)

## திதி வெண்பா

சர்வதாரி ஆண்டு ஆடிமாதம் திங்கட்கிழமை
இரவு தன்னில் அபரபக்க வைஷ்ணவ ஏகாதசி
திதி மாண்புமிகு நாகலிங்கம் ஜெயரஞ்சிதன்
இறைவனடி எய்திய நன்னாள்.

உ

சிவமயம்



# தோத்திரப் பாக்கள்

## விநாயகர் துதி

### திருச்சிற்றம்பலம்

வாக்குண்டாம் நல்லமனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனிநுடங்காது பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

## தேவாரம்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே
யிருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும்
வழிபடு மதனாலே

## திருவாசகம்

பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆநந்த மாய

தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமாகடலை
மற்றவரறியா மாணிக்கமலையை
மதிப்பவர்மன மணிவிளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

சீருந்திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத வறிவுபெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊருமுலகும் கழறவுழறியுமை மணவாளனுக் காட்
பாரும் விசும்பு மறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
"பிறவாமை வேண்டும் ; மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்

மறவாமை வேண்டும் ; இன்னும்
வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுன்
அடியின்கீ ழிருக்க" என்றார்.

## திருப்புகழ்

நீலம் கொள் மேகத்தின் மயில் மீதே
நீ வந்த வாறைக் கண்டதனாலே
மால் கொண்ட பேதைக்குன் மணந்நாறும்
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே
வேல் கொண்டு வேலைப்பண் டெறிவோனே
வீரங் கொள் அசுரர்க்கிங் உலகான
நாலந்த வேதத்தின் பொருளோனே
நானென்று மார்தட்டும் பெருமாளே.

## வாழ்த்துப்பா

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக வுலகமெலாம்.



உ



# சங்கரத்தை பிட்டியம்பதி வீரபத்திரசுவாமி சமேத பத்திரகாளி அம்பாள் பதிகம்

அக்குமணி மிக்கசெக் கர்ச்சடையு முக்கண்ணு
மாயிரங் கமலமுகமும்
அணிமணிக் குண்டலங் குழைகளுங் குலமலையி
னழகொழுகு கனக புயமும்
தொக்குயர் படைக்கலக் கைகளும் மார்பிற்
றுலங்கு செம்பொன் னாரமும்
சுருதியுங் கருதரிய பரிபுர பதங்களுந் தோன்ற
வந்தெனை யாளுவாய்
தக்கனொடு மக்கள் மருமக்கள்பக் கத்திலுறை
சதுர்முகன் முதல் வானவர்
தங்கள் கருவங்க ளதிபங் கம்படச் சிவன் தலைமை
நிலையிட்ட முதல்வா
திக்குலவு சோலையுஞ் சாலையும் பாலிற் செறிந்த
பிட்டிப் பதியில் வாழ்
சித்திர வலங்கார பத்திரகாளிக்கன்பு திகழ்வீர
பத்ர குருவே.



திருமரவு பரமசங் கரகிருபா கரவரத திரிபுராந் தகபக வனைத்
திடமனதுடனன்று வடவனத் தினின்று சேர்ந்து வாதாடியோடி
உருமருவு மண்டலமோ டண்டர்பயில் எண்டிசைகள்
உயரண்ட ரண்ட முழுதும்
உன்னியெழு கோரிமாவீரி சடையன்பாரி உயரி ரீங்காரி சூரி
மருமருவு சடிலதர காளிகங் காளிசர் வாணிமா தங்கி சூலி
மதமகிட சங்காரி வீரசிங்காரி நெடுவாரி சூழ்பாரினிலவும்
தருமருவு பீட்டிநகர் உறையுமொரு கௌரியே
தயவு வைத்தெம்மை யாளுவாய்
சத்தியுத் தமிசித்ர மெத்து விந்தகி
நித்திய சத்தி பத்திர காளி யம்மையே.

### சங்கரத்தை கரந்தைக்குளவத்தை
### சாஸ்திரியார் மடம்
## முருகமூர்த்தி பதிகம்

பேர்பூத்த கந்தனே பிறைசூடி மைந்தனே
பிரணவப் பொருளை வினவிப்
பிரமனைச் சிறையிட்ட சரவணச் செல்வனே
பேணுமயில் மீதிலமர்ந்து
பார் பூத்த சுகமெலாம் பாலிக்குமையனே
பரவு நான் மறை முதல்வனே
பண்பூத்த திருமுறைகள் தந்த கணபதிக்கிளைய
பால சுப்ர மணியனே
தார்பூத்த சடையனும் சௌபாக்கிய கௌரியும்
தருசக்தி வேலழகனே
தவவள்ளி குஞ்சரி மணாளனே வாரணத்
தனிக்கொடி நயந்த குகனே
சீர்பூத்த நின்பாத கமலங்களனு தினமும்
சேவிக்க வரமருளுவாய்
திகழ் வட்டுச் சங்கரத்தை கரந்தைக்குள
சிவகுமர குரு முருகனே.

உ



## வட்டுகிழக்கு துறட்டிப்பனை
# முத்துமாரி அம்பாள் பதிகம்

மாதாமுத்துமாரி வையமெல்லாம் நீநிறைத்தாய்
ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே
ஏதாயினும் வழிநீ சொல்வாய் எமதுயிரே
வேதாவின் தாயே மிகப்பணிந்து வாழ்வோமே.

பாதுகாத்தருள் தாயே பாதுகாத்தருள்
பராசத்தி முத்துமாரியே பாதுகாத்தருள்
எங்கும் நிறைந்தவளே பாதுகாத்தருள்
இரங்குமடியாரெல்லாம் பாதுகாத்தருள்
பொங்கும் அருள் பொழிந்து பாதுகாத்தருள்
போற்றுகின்றோம் நின்புகழை பாதுகாத்தருள்
செங்கயனல் சிவன் தேவி பாதுகாத்தருள்
சேவடியை கைதொழுதோம் பாதுகாத்தருள்
சங்கரியே சாம்பவியே பாதுகாத்தருள்
சங்கரர்க்கோர் பாகத்தாய் பாதுகாத்தருள்
மங்காய் பெருநிதியே பாதுகாத்தருள்
மதிப்பார் மனம்கோவில் கொண்டாய் பாதுகாத்தருள்
மகேஸ்வரியே மனோன்மணியே பாதுகாத்தருள்
வாமையுமை மகமாரி பாதுகாத்தருள்

துறட்டிப்பனை பதியிருந்து பாதுகாத்தருள்
துலங்குமொழி நீயாகி பாதுகாத்தருள்
ஆற்றல், கலையழகானாய் பாதுகாத்தருள்
அன்பருளக் கோவில் நின்றாய் பாதுகாத்தருள்
எண்ணில்லா வடிவுடையாய் பாதுகாத்தருள்
எம்மிதயத்தேயிருந்து பாதுகாத்தருள்
எத்திசைக்கு மெழிலானாய் பாதுகாத்தருள்
பக்தி செயப் பாங்குறைவாய் பாதுகாத்தருள்
சீவன் முத்தர் போற்றுந்தாயே பாதுகாத்தருள்
செந்தில் வடிவேற் கண்ணாய் பாதுகாத்தருள்
கட்டுக்காயம் கட்டறுத்து பாதுகாத்தருள்
காணை நின்னை காட்டி நின்று பாதுகாத்தருள்
முத்திக்கு வித்தானாய் பாதுகாத்தருள்
மூலம் முடிவாகி நின்றாய் பாதுகாத்தருள்
வெந்துயர்கள் தீர்த்தெம்மை பாதுகாத்தருள்
வேண்டும் வரமீந்தெம்மை பாதுகாத்தருள்
மந்திரம் நால் வேதமும் நீ பாதுகாத்தருள்
மதி விதிக்கும் மருந்தானாய் பாதுகாத்தருள்
பாது காத்தருள் தாயே பாதுகாத்தருள்
பராசக்தி முத்துமாரியே பாதுகாத்தருள்.

**(தேவியின் தலப்பாடலாக ஆதியில் அமைந்த பாடல்)**

**யோக தட்சிணாமூர்த்தி காட்டும் சின்முத்திரைகள்**

| | | |
|---|---|---|
| கட்டை விரல் | = | இறைவன் |
| சுட்டுவிரல் | = | ஆன்மா |
| நடுவிரல் | = | ஆணவம் |
| மோதிரவிரல் | = | கன்மம் |
| சுண்டுவிரல் | = | மாயை |

உ



# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சி னீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேச னடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்றநிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்

பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்.
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங் கொள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்கில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்து ம் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி

நாயிற் கடையாய்க் கிடந்த அடியேர்க்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டு ணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும்வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச்சுட ரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயாஅரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானை சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

உ



## ஔவையார் அருளிச் செய்த
# விநாயகர் அகவல்

சீதக் களப்பச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்

பொருந்தவே வந்தென் னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலியதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமுங்

குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முகதூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனி தெனக்கருளிப்
புரியட்டகாயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக்கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக்களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள் வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள் தரும ஆனந்தத் தழுத்தி என் செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்து அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடும் மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

(விநாயகர் அகவல் முற்றிற்று)

### உயர்திரு. நாகலிங்கம் ஜெயரஞ்சிதன்
(சமாதான நீதவான்)
அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்த படித்த இளைஞர்களுக்கு மலேசியா (Malaysia) நாட்டில் மிகுந்த செல்வாக்கு இருந்தது.

அவர்களுடைய ஆங்கில அறிவும், கணித அறிவும், உயர்ரகத்தில் இருந்ததாலும், அவர்களுடைய உயர்ந்த பண்பாட்டையும், கடமை உணர்வையும், நேர்மையையும், விசுவாசத்தையும் அப்பொழுது மலேசியாவில் ஆட்சி கொண்டிருந்த பிரிட்டிஷ் அரசாங்கம் விரும்பியபடியாலும் படித்த யாழ்ப்பாண இளைஞர்களுக்கு மலேசியாவின் அரசாங்க சேவையில் நல்ல உத்தியோகங்கள் கிடைத்தன.

அவர்களில் ஒருவர்தான் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு. வைத்திலிங்கம் நாகலிங்கம் அவர்கள்.

இவர் மலேசியாவின் நீர்ப்பாசன வடிகால் திணைக்களத்தில் (Drainage and Irrigation Department) உயர் பதவி வகித்தவர். வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கந்தையா - இரத்தினம் தம்பதிகளின் மூத்த மகளான சரஸ்வதியை மணமுடித்தார். இருமகன்மாரையும், இரு மகள்மாரையும் பெற்றெடுத்து இனிதே அவர்களுடைய இல்லற வாழ்க்கை சென்றபோது விதி சதிசெய்தது.

திரு. நாகலிங்கம் அவர்கள் 1943ஆம் ஆண்டு தனது 34ஆவது வயதில் ஓர் வாகன விபத்தில் அகால மரணமானார். இப்பேரிடியை தனது மனோவலிமையால் தாங்கிக்கொண்டு திருமதி நாகலிங்கம் 1946ஆம் ஆண்டு, இரண்டாவது உலக மகா யுத்தம் முடிய, தனது நான்கு பிள்ளைகளுடனும் இலங்கை திரும்பி தங்கள் கிராமமாகிய வட்டுக்கோட்டையில் குடியேறினார்.

எங்கள் எல்லோருடைய பெருமதிப்புக்கும் உரியவரான திருமதி சரஸ்வதி நாகலிங்கம் அம்மையார் தனது நான்கு பிள்ளைகளையும் சிறந்த ஒழுக்க சீலராகவும் நல்லெண்ணம் படைத்தவர்களாகவும் அன்புடன் வழிநடத்தினார். உரிய வயதில் அவர்களை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் சேர்த்தார். பிள்ளைகளும் நன்கு பயின்று தேறினார்கள்.

அவருடைய மூத்தமகன் திரு. மனோரஞ்சிதன் யாழ்ப்பாணக் கல்லூரியில் 1958 ஆம் ஆண்டு மாணவர்சபை தலைவராகவும் பதவி வகித்தார்.

சரஸ்வதி அம்மையாருடைய இரண்டாவது மகன்தான் திரு. ஜெயரஞ்சிதன் அவர்கள். 20.04.1940 இல் பிறந்த அவர் யாழ்ப்பாணக் கல்லூரியில் தனது கல்வியை முடித்துக்கொண்டு பிரசித்தி பெற்ற Ford Rhodes and Thornton பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் பயிலுனர் கணக்காளராகச் சேர்ந்தார்.

பயிற்சி முடிந்ததும் Audit Examiner ஆக சேவையாற்றிய பின்பு Akbar Brothers Limited நிறுவனத்தில் கணக்காளராகச் சேவையாற்றி இறுதியாக Shabra Unico Finance Limited இல் கணக்காளராகச் சேவையாற்றினார். அவர் சேவையாற்றிய நிறுவனங்களில் எல்லாம் அவருடைய திறமைக்கும் நேர்மைக்கும் மிகவும் மதிக்கப்பட்டார்.

திரு. ஜெயரஞ்சிதன் அவர்கள் 1972 ஆம் ஆண்டு சங்கரத்தை, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மலேசியாவின் பேராக் மாகாணத்தின் பிரதான பொதுநல சுகாதார பரிசோதகராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற கார்த்திகேசு நாகம்மா தம்பதிகளின் இளைய மகளாகிய செல்வலட்சுமியைத் திருமணம் செய்து அவர்களுடைய இல்லறவாழ்வு இனிதே நடந்தது.

குழந்தைச் செல்வம் கிடைக்காவிட்டாலும் எல்லோருடைய குழந்தைகளுக்கும் தங்கள் குழந்தைகள் போல் தங்கள் அன்பைச் செலுத்தினார்கள். அவர்கள் இருவருமே படாடோபத்தையும் தாம்பீக வாழ்க்கையையும் வெறுத்து மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தார்கள். வறிய மக்களின் கஷ்டங்களை நன்கு அறிந்து அவர்களுக்குத் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்தார்கள்.

அவருடைய பொதுநல சேவையின் பயனாக திரு. ஜெயரஞ்சிதன் அவர்களுக்கு 1997ஆம் ஆண்டு சமாதான நீதவான் பதவி வழங்கப்பட்டது. கிராம மக்கள் தங்கள் பிரச்சனைகளோடு அவரிடம் வந்தபொழுது அவர்களுக்குத் தகுந்த ஆலோசனைகளை எடுத்துக்கூறி தன்னாலான உதவிகளைச் செய்தார்.

அவருடைய திறமைக்கும் நேர்மைக்கும் எல்லோராலும் மதிக்கப்பட்டார். சங்கரத்தை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவ ராகக் கடமையாற்றியவர். தன்னுடைய கிராமத்தின் அபிவிருத்தி யிலும் முன்னேற்றத்திலும் என்றும் ஈடுபாடு உள்ளவராக இருந் தார்.

சமயப் பணிகளிலும் அவர் தன்னாலானவற்றை எல்லாம் செய்து உதவினார். வட்டு - கிழக்கு துறட்டிப்பனை முத்துமாரி யம்மன் கோவிலின் பரிபாலனசபைத் தலைவராக இருந்து கோவி லின் முன்னேற்றத்துக்கு பல முயற்சிகளை மேற்கொண்டார். சங்கரத்தை முருகமூர்த்தி கோவிலின் பரிபாலனசபை தலைவ ராகவும் இருந்து பெரும் சேவை செய்துள்ளார்.

யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் தலைவ ராகவும் இருந்து கல்லூரியின் வளர்ச்சிக்கு சேவை செய்துள்ளார். சங்கானை பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தில் விசாரணைக்குழுத் தலைவராகக் கடமையாற்றியவர்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வலிகாமம் மேற்குக் கிளையின் பொருளாளராகக் கடமையாற்றியவர். பாவனையாளர் பாதுசாப்புச் சங்கத்தின் உறுப்பினராக இருந்து சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டங்களுக்கு தவறாது சமூகமளித்தவர்.

திரு. ஜெயரஞ்சிதன் அவர்கள் காலமாகுமுன் ஓர் வேண்டு கோள் விடுத்தார். அதாவது, தான் காலமான உடன் தன்னுடைய இரு கண்களின் கோனியாக் (Cornea) களையும் கண்பார்வை இல்லாத இருவருக்கு அளித்து அவர்கள் இருவருக்கும் பார்வை அளிக்கும்படி அவருடைய வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டது. அவருடைய நல்லெண்ணத்தை எடுத்துக்கூற வேறு உதாரணம் தேவை இல்லைதானே.

**"தோன்றிற் புகழோடு தோன்றுக"** என்னும் திருவள்ளுவர் திருவாய் மொழிக்கு இலக்கியமாக வாழ்ந்து 28.07.2008 இல் இறைவனடி சேர்ந்தார். அவருடைய ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.



இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.
-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-

Sivaranjanam

பாரதி பதிப்பகம், 430, காங்கேசந்துறைவீதி, யாழ்ப்பாணம்